நாள் - 25.02.2026

**C.C. No.**12/2025

**அ.சா.1-முருகேசன், த/பெ.வேல்சாமி**

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 25th **day of February** 2026.

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இன்று குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது தந்தையும் இவ்வழக்கில் இரண்டாம் எதிரி சுப்பையா கவுண்டரும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். நானும் 1ம் எதிரி சித்தப்பா மற்றும் பெரியப்பா மகன்கள் என்றால் சரிதான். S. அய்யம்பாளையத்தில் 321/1 எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 321/2 சர்வே எண் எதிரிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 321/3 எங்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 321/5 எதிரிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி இருவரும் சென்றுவர பொது பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். தடம் சம்பந்தமாக எதிரிகள் எங்கள் மீது அசல் வழக்கு தாக்கல் செய்து இருந்தார்கள் என்றால் சரிதான். அசல் வழக்கில் நாங்களும் எதிரிகளும் சமரசமாக பேசி தீர்த்துக் கொண்டோம் என்றால் சரிதான். பொது கிணற்றில் எங்களுடைய கிணற்று பங்கை அளித்து அதற்கு ஆதரவாக ரூபாய் 2 லட்சம் பெற்றுக் கொண்டோம் என்றால் சரிதான். 18.11.2014ம் தேதி மாலை சுமார் 04.00 முதல் 05.00 மணிக்குள்ளாக பிரச்சனை நடந்தது. .நான் முதல் விசரணையில் தோட்டத்திலிருந்து மண் எடுத்து வந்து கொண்டிருந்ததாக சொல்லி உள்ளேன். மேற்படி யாருடைய தோட்டத்தில் இருந்து எடுத்து வந்தேன் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. நான் முதல் விசாரணையில் எதிரிகள் என்னை தடுத்து நிறுத்தியதாக சொல்லி உள்ளேன் எந்த இடத்தில் தடுத்து நிறுத்தினார்கள் என குறிப்பிட்டு சொல்லி உள்ளேன் என்றால் சொல்லவில்லை. ஆனால் என்னுடைய இடத்தில் தடுத்து நிறுத்தினார்கள். மேற்படி மண் எடுத்துக்கொண்டு வந்ததாக சொல்லப்படும் டிராக்டர் யாருக்கு சொந்தமானது என எனது முதல் விசாரணையில் சொல்லி உள்ளேன் என்றால் குறிப்பாக சொல்லவில்லை. பாலசுப்ரமணியம் அவர்களுடைய டிராக்டரை கொண்டு வந்தேன். நான் முதல் விசாரணையில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பொழுது யார் யார் இருந்தார்கள் என குறிப்பாக சொல்லி உள்ளேன் என்றால் சொல்லி உள்ளேன். மாகாளி, காளிமுத்து, பாலசுப்பிரமணியம், மாசிலாமணி ஆகியோர்கள் இருந்ததாக சொல்லி உள்ளேன். பாலசுப்ரமணியம் எனக்கு உறவு முறை கிடையாது. மாகாளி மற்றும் காளிமுத்து இருவரும் என்னிடம் வேலைக்கு வருபவர்கள். நான் முதல் விசாரணையில் டிராக்டரின் டயர் காற்றை பிடுங்கி விட்டதாக சொல்லி உள்ளேன். எந்த டயரின் கயிற்றை பிடிங்கி

விட்டார்கள் என குறிப்பாக சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். நான் அளித்த புகார் மற்றும் அளித்த முதல் விசாரணை சாட்சியத்தில் டிராக்டர் என மட்டும்தான் சொல்லி உள்ளேன். டிராக்டர் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லி உள்ளேன்.

3. மேற்படி எதிரிகள் அடித்ததாக சொல்லப்படும் சம்பவத்தில் எனக்கு ஏற்பட்ட எலும்பு முறிவிற்கு முன் கதிர் படம் எடுத்து பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். மேற்படி நுண்கதிர் படத்தை வழக்கு ஆவணமாக தாக்கல் செய்தேனா என்றால் அது சம்பந்தமாக எனக்கு தெரியாது. போலீசார் தாக்கல் செய்து உள்ளார்களா என எனக்கு தெரியாது. எதிரிகள் என்னை எதனால் அடித்ததாக சொல்லி புகார் அளித்தேன் என்றால் கம்பியால் அடித்தார்கள். போலீசாரிடம் நான் அடித்ததாக சொல்லப்படும் கம்பியை அடையாளம் காண்பித்தேனா என்றால் போலீசார் சம்பவ இடம் வந்து கம்பியை எடுத்துச் சென்றார்கள். நான் எதிரிகள் அனுபவத்தில் உள்ள சர்வே எண்ணில் சென்றேன் என்றும் எதிரிகள் என்னை தடுத்து நிறுத்தவில்லை என்றும் கேட்டதற்கு நான் எதிரிகள் அடித்ததாக பொய்யான வழக்கு கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.02.25 18:12:41 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**